**1 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

முன்னிலை : **திருமதி.R.L.பிரியதர்ஷினி, B.A., B.L.,**

2 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

1 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ)

திருநெல்வேலி

2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 28 ம் நாள் சனிக்கிழமை

**I.A.No.11/2026 in RCOP.No.50/2016**

திருநெல்வேலி இந்து நாடார்கள் பொது அபிவிருத்தி
சங்கம் அதன் செயலாளர் மூலமாக ... மனுதாரர் /மனுதாரர்

–எதிர்–

1) R.சுந்தரவேல்

2) சுமதி
உரிமையாளர்
M/s.அபினவ் லேசர் பிரிண்டர்ஸ் ... எதிர்மனுதாரர்/ மனுதாரர்

இம்மனு என்முன்பாக 08.12.2025 அன்று இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.ராமகிருஷ்ணன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.சிவசுப்பிரமணியன் அவர்கள் முன்னிலையாகியும் இருதரப்பு வாதங்களை கேட்டறிந்தும், மனு மற்றும் ஆவணங்களை ஆராய்ந்து இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்,

**உத்தரவு**

இம்மனுவானது, 2 ம் உத்தேச எதிர்மனுதாரரை அசல் மனுவில் 2 ம் எதிர்மனுதாரராக கட்சி சேர்க்க உத்தரவிட வேண்டி உரிமையியல்

விசாரணை முறை சட்டம் கட்டளை 1 விதி 10(2) மற்றும் பிரிவு 151ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2) மனுவின் சுருக்கம்</u>**

2.1) 1ம் மனுதாரர் சுந்தரவேல் என்பவர் மனு தபசில் வளாகத்தை வாடகைக்கு அபினவ் லேசர் பிரிண்டர்ஸ் என்ற பெயரில் வியாபாரம் செய்து வந்து வாடகை செலுத்தி வந்தார். 2ம் எதிர்மனுதாரரான சுமதி என்பவர் 1ம் எதிர்மனுதாரரின் மனைவி என்றும் மேற்படி அபினவ் லேசர் பிரிண்டர்ஸ்ன் உரிமையாளர் என்றும் கூறப்பட்டது. அசல் மனுவின் எதிருரை மற்றும் இ.ம.எண் 10/2026 உறுதிமொழியிலும் 1ம் எதிர்மனுதாரர் அவசியமான தரப்பினரை கட்சி சேர்க்கவில்லை என்று ஆட்சேபனை தெரிவித்துள்ளர். மேற்படி ஆட்சேபனையை நிலைநிறுத்தும் வகையில் எந்தவொரு ஆவணத்தையும் அவர் தாக்கல் செய்யவில்லை.

2.2) மேலும் மனுதாரர் ஒருபோதும் 2ம் எதிர்மனுதாரரை மனு தபசில் கடையில் இருப்பதை பார்த்ததில்லை. 1ம் எதிர்மனுதாரர் அவரது குறுக்கு விசாரணையின் போது " மனுதாரர் சங்கத்தில் இதுவரைக்கும் நான் வாடகை ஒப்பந்தம் போடவில்லை. எப்போது மனுதாரர் கட்டிடத்திற்கு வாடகைக்கு வந்தேன் என்றால் 1990ல் வந்தேன் நான் அந்த கட்டிடத்தில் அபினவ் லேசர் பிரிண்டிங் பிரஸ் என்ற பெயரில் பிரஸ் நடத்தி வருகிறேன். நான் நடத்தி வரும் கடைக்கு லைசென்ஸ் உள்ளதா? என்றால் இல்லை. அதன் G S T யார் பெயரில் உள்ளது என்றால் அபினவ் லேசர் பிரிண்டு என்ற பெயரில் உள்ளது. என்று கூறியுள்ளார்.

2.3) இருப்பினும் 2ம் எதிர்மனுதாரர் கடையை நடத்துவது சம்பந்தமாக 1ம் எதிர்மனுதாரர் எதுவும் கூறவில்லை. மேலும் அபினவ் லேசர் பிரிண்டர்ஸ் உடனோ மேற்படி சுமதியுடனோ எந்த தனிப்பட்ட வாடகை ஒப்பந்தமும் செய்யவில்லை. எனவே முதலில் மனுதாரர் 2ம் எதிர்மனுதாரரை கட்சி சேர்க்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. இருப்பினும் 1ம் எதிர்மனுதாரர் அவசியமில்லாத தரப்பினரை கட்சி சேர்த்துள்ளதாகவும் அவசியமான தரப்பினரை கட்சி சேர்க்கவில்லை என்றும் கட்சி செய்து வருவதால் 2ம் எதிர்மனுதாரரை கட்சி சேர்க்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

**3) எதிருரையின் சுருக்கம்**

3.1) அசல் மனுவானது தாக்கல் செய்யப்பட்டு 10 ஆண்டுகள் கழித்து இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கட்டளை 1 விதி 10(5)ன் வரையறைக்கு உட்பட்டு காலவரையறை சட்டம் 1877 ன் பிரிவு 22 ன் படி பிரதிவாதியாக சேர்க்கப்படும் நபருக்கு எதிரான நடவடிக்கைகள் சம்மன் சார்பு செய்யப்பட்ட தேதியில் தொடங்கும் எனவே இந்த மனுவானது காலவரையறை சட்டம் 137 ன் படி பாதிக்கப்பட்டுள்ளது.

3.2) அசல் மனுவின் எதிருரையிலேயே மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் நில உரிமையாளர் வாடகைதாரர் ஒப்பந்தம் இல்லை என்றும் அபினவ் லேசர் பிரின்ட்ஸ்–ன் உரிமையாளர் சுமதி என்று கூறப்பட்டுள்ளது. எனவே இம்மனு தற்போது நிலைக்கத்தக்கதல்ல. சுந்தரவேல் என்பவரது பெயர் தற்போதும் நீக்கப்படவில்லை. எ.ம.சா3 ஐ விசாரணை செய்ய அசல் மனு வைக்கப்பட்டுள்ள நிலையில் இம்மனு நிலைக்கத்தக்கதல்ல.

3.3) மனுதாரர் அசல் மனுவை மேல்நடத்தாமல் இருப்பதே ஒரே வழியாகும். அசல் மனுவில் வெற்றிடத்தை நிரப்புவதற்காக காலதாமதப்படுத்துவதற்காகவும் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் எதிர்மனுதாரர் தரப்பில் (2008) 4 SCC 594, (2005) 12 SCC 1, 2011 (1) CTC 96, 2017 (11) TNLJ 426 ஆகிய முன் தீர்ப்புகள் சுட்டிக்காட்டப்பட்டது.

**4) தீர்வு**

5) இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

6) இம்மனு அனுமதிக்கத்தக்கதா?

7) எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள அசல் எதிருரையில் அபினவ் லேசர் பிரிண்ட்ஸ் உரிமையாளர் சுமதி என்பவரை தரப்பினராக சேர்க்காமல் தாக்கல் செய்துள்ள அசல் மனு நிலைக்கத்தக்கதல்ல என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் 2ம் எதிர்மனுதாரர் தான் மனு தபசில் சொத்தில் எதிர்மனுதாரர் நடத்தி வரும் அபினவ் லேசர் பிரிண்ட்ஸ் என் உரிமையாளர் சுமதி தான் என்பதை நிரூபிக்கும் வகையில் எதிர்மனுதாரர் அசல் எதிருரையுடன் எந்த ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை.

8) மேலும் 2ம் எதிர்மனுதாரரை மனு தபசில் வளாகத்தில் மனுதாரர் பார்த்ததில்லை என்று கூறப்பட்ட நிலையில் எதிர்மனுதாரரின் ஆவணங்களை தாக்கல் செய்யாததால் 2ம் எதிர்மனுதாரர் தான் அபினவ் லேசர் பிரிண்ட்ஸ்ன் உரிமையாளரா? என்பதை அறியும் வாய்ப்பு ஏற்படவில்லை என்று மனுதாரர் தரப்பில் கூறப்பட்ட சங்கதி ஏற்றுக்கொள்ளத்தக்கதாக உள்ளது.

9) மனு தபசில் வளாகத்தின் வியாபாரத்தின் உரிமையாளர் 2ம் எதிர்மனுதாரர் என்று 1ம் எதிர்மனுதாரர் தரப்பிலேயே ஒப்புக்கொள்ளப்பட்டு உள்ளது. எனவே அவசியமான தரப்பினரான 2ம் எதிர்மனுதாரரை கட்சி சேர்க்கவில்லை என்று எதிர்மனுதாரர் தரப்பில் செய்யப்படும் ஆட்சேபனையை நிவர்த்தி செய்யும் விதமாக 2ம் எதிர்மனுதாரரை இவ்வழக்கில் கட்சி சேர்க்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

10) 2ம் எதிர்மனுதாரரை கட்சி சேர்ப்பதால் அசல் மனு காலவரையறையால் பாதிக்கப்படுமா? இல்லையா? என்பதை இம்மனுவில் தீர்மானிக்க இயலாது. காலவரையறை குறித்த சங்கதியானது சட்டம் மற்றும் பொருண்மை கலந்த வினாவாகும். எனவே அசல் மனுவில் தரப்பினர்களை விசாரிப்பதன்பேரில் மட்டுமே 2ம் எதிர்மனுதாரரை தற்போது கட்சி சேர்த்துள்ளதால் அசல் மனு காலவரையறையால் பாதிக்கப்பட்டுள்ளதா? என்பதை கண்டறிய முடியும். எனவே மனுதாரர் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்ட முன்தீர்ப்புகள் இந்த மனுவின் பொருண்மைக்கு பொருந்தாது. அசல் மனுவிலேயே மேற்படி முன்தீர்ப்புகளின் அடிப்படையில் அசல் மனு காலவரையறையால் பாதிக்கப்பட்டுள்ளதா? என்பதை பரிசீலனை செய்ய முடியும்.

11) மேலும் நியாய வாடகை நிர்ணயிக்க தாக்கல் செய்யப்பட்ட மனுவில் அவசியமான தரப்பினரை கட்சி சேர்க்கவில்லை என்பதால் மட்டுமே வழக்கை பாதிப்படைய செய்யக்கூடாது என்ற நோக்கில் இம்மனு மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இம்மனுவை செலவுத்தொகையுடன் அனுமதிப்பது தான் நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**12) இறுதியாக,**

மனுதாரர் ரூ.1000/−ஐ எதிர்மனுதாரர்களுக்கு செலவுத்தொகையாக 30.03.2026 தேதிக்குள் செலுத்தும் பட்சத்தில் இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு விரிவாக்கம் செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2026ம் ஆண்டு மார்ச் மாதம் 28ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL

Digitally signed by PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL
Date: 2026.03.28 13:21:44 +0530

1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, (மு.கூ.பொ)
திருநெல்வேலி

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சி சான்றாவணங்கள்</u>- இல்லை
<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி சான்றாவணங்கள்</u>- இல்லை

PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL

Digitally signed by PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL
Date: 2026.03.28 13:21:51 +0530

1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, (மு.கூ.பொ)
திருநெல்வேலி

1வது கூடுதல் மாவட்ட
உரிமையியல் நீதிமன்றம்,
திருநெல்வேலி

**<u>I.A.No.11/2026 in</u>**

**<u>RcCOP.No.50/2016</u>**

சீரான/ வரைவு – உத்தரவு
28.03.2026